**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2019 ஆம் ஆண்டுக்கான காலி-பலப்பிட்டிய மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2121 - 2019 අප්‍රේල් මස 26 වැනි සිකුරාදා - 2019.04.26

*2121 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 992 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 994 |


**கவனிக்க.-** மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (திருத்தம்) சட்டமூலம் 2019, ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மே மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*989-B 81516-5,403 (2019/04)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது, 40 வயதிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, மே மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, மாச்சு 14.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | ஹங்குரன்கெத்த | தியதிலகே பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உட ஹேவாஹெட்ட பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி. | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |

04-546

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவி - முல்லைத்தீவு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரரின் வயது, 40 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்குக்குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராகியிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, மே மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஏப்பிறல் 05.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | கரைதுறைப்பற்று | கரிக்கட்டுமூலை தெற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு |

04-1108

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

## அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (II) 2019

1.0 2012.09.07 ஆந் திகதிய 1774/31 என்ற இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, 2012.02.14 ஆந் திகதிய 1745/11 என்ற இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இலுள்ள ஏற்பாடுகளுக்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2019, ஓகத்து மாதத்தில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2.0 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களின் பட்டியல் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகளின் பற்றாக்குறை அல்லது வேறு ஏதேனும் காரணமாக குறித்த நிலையத்தினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பு நகரம் அல்லது கிட்டிய மற்றொரு நகரத்திற்கு அல்லது அமையப்பெற்றுள்ள பரீட்சை நிலையமொன்றுக்கு மாற்றவும் மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையுடைய அல்லது பரீட்சை நிலையமொன்றினை நிறுவுவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருக்காதுவிடின் கொழும்பில் மாத்திரம் பரீட்சையினை நடாத்துவதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கீழே தரப்பட்ட நகரம் மற்றும் நகர இலக்கங்களை உசாவுதல் செய்து விண்ணப்பத்தின் உரிய பிரிவு நிரப்பப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்ட நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

3.0 (i) இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அது தொடர்பில் அவரினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

(ii) பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

4.0 **தகைமை** : அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படாத ஆனாலும் உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்த அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராவர்.

**குறிப்பு** : மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் குறித்தான ஏற்பாடுகளானவை இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக உரிய மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். அம்மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஏனைய நிறுவன அலுவலர்களின் விண்ணப்பங்களை இலகுவாக வேறுபடுத்த விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் பொருத்தமான சேவை அல்லது குறித்த நிறுவனத்துக்குரிய குறியீட்டு இலக்கத்தை குறிப்பிட வேண்டும். இணைந்த சேவைக்குரிய அலுவலரின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும். இவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் நீங்கள் உரித்தான சேவை எனும் இடத்தில் குறிப்பிடவும். (சரியான இலக்கத்தை குறிப்பிடாதுவிடுவதனால் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படமாட்டாது.)

5.0 இப்பரீட்சைக்கான விண்ணப்பமானது இவ் அறிவித்தலில் பின்னிணைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் பரீட்சார்த்தியினாலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை தனது திணைக்களத் தலைவரின் மூலம் 2019, மே மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக் (தாபன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரியினை அடையக்கூடியதாக உரிய திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரானது குறிப்பிடப்படல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6.0 **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்** : விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வை யாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவார்கள். அதற்காக பின்வரும் ஆளடையாளப் பத்திரம் ஏதேனும் ஒன்றினை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

மேலே குறிப்பிடப்பட்ட ஆளடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்களின் பரீட்சார்த்தத் தன்மையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம். இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளிற்கு இணங்கியொழுகுவதற்கு சகல விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டவராவர். மேலும் அவ் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

7.0 (i) விண்ணப்பங்களை தயாரித்தல்: - மாதிரி விண்ணப்பப் படிவத்தின் படி, பந்தி இலக்கங்கள் 1.0 தொடக்கம் 6.0 வரை முதற் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் தோன்றும் விதத்தில் A4 அளவிலான ஒரு தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பமானது தட்டச்சு செய்யப்பட முடியும். ஆனால் அதை விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தினையே ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்பவேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பலாகாது. மாதிரிப்படிவத்துக்கு ஏற்ப அமையாத மற்றும் முறையாக முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்கள் இரண்டிலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் பரீட்சை தலைப்பினை அதேபோல ஆங்கில மொழியிலும் தயவு செய்து குறிப்பிடவும். தன்னால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாகவும் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் விண்ணப்பம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனவும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா எனவும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். மேலும், விண்ணப்பதாரி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.

(ii) *பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.-* விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப, எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தகைமையை இரத்துச்செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தவேண்டியதில்லை. எனினும், அடுத்தடுத்த அமர்வுகளிற்கு ஒரே தடவையில் எல்லா விடயங்களுக்கும் தோற்றுவதனால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்கு தோற்றுவதனால் ரூபா 500 உம் ஒரு விடயத்துக்கு மட்டும் தோற்றுவதனால் ரூபா 250 உம் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 க்கு அரசாங்க வருமானத்துக்கு வரவு வைக்கப்படுவதற்கென நாட்டின் ஏதேனுமோர் தபாலகம்/உப தபாலகத்தில் அல்லது மாவட்ட/பிரதேச செயலகத்துக்கோ பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற் படப்பிரதியொன்றை தம்வசம் வைத்தக்கொள்ளுதல் பிரயோசனப்படலாம். இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் திருப்பியளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்கு செலுத்திய கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றிக்கொள்ள முடியாது. மேலும் பரீட்சைக் கட்டணத்துக்காக முத்திரை அல்லது காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்திற்கு ஏற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசியின் பிரதிகளையும் அனுமதி அட்டைகளையும் வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அல்லது திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 நாட்கள் அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையிடும் வேளையில் பின்வருவனவற்றை அதாவது தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியிருப்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பிய போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதிகள் என்பனவற்றை தங்களிடம் வைத்துக் கொள்தல் பயனுடையதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின், மேலே குறிப்பிட்ட விபரங்களுடன் அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளில் தமது கையொப்பங்களை முன்கூட்டியே உறுதிப்படுத்தப்பட்டு பெற்றுக்கொள்வதுடன் அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளித்தலும் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியினைக் கொண்டுள்ளார் எனக் கருதலாகாது.

9.0 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

10.0 பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தன்னுடைய கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

11.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள, முதற் தடவை பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதித்தல் வேண்டும். பிரயாணச் செலவினங்கள் எவையும் செலுத்தப்படமாட்டாது.

12.0 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடத்தப்படும் உரிய சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்காக அவர்கள் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சை இல்லாமல் சேவைக்குள் உள்நுழைந்த பரீட்சார்த்திகள் தொடர்பில், அவர்களின் கல்வி மொழி மூலத்தில் அல்லது அரசகரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

13.0 அலுவலர்கள் தமது தற்றுணிபின் பேரில் வேறுபட்ட தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகத் தோற்றலாம். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நாற்பது வீதத்தினை (40%) அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இனைப் பார்க்கவும்.)

14.0 அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்காக, சகல அலுவலர்களும் அரசகரும மொழியில் விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து அம்மொழி மூலம் நிரப்புதல் வேண்டும்.

15.0 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளின் பெறுபேறு அடங்கிய பெயர்ப் பட்டியல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியலானது பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் இணையத் தளத்தில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

16.0 **பரீட்சை நடைமுறை** : விண்ணப்பதாரிகள் பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும்.

| பாடம் | புள்ளிகள் | நேரம் | பாட இல. |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைமைகள் | 100 | 01 மணித்தியாலம் | 01 |
| 2. கணக்கீட்டு முறைமைகள் | 100 | 01 மணித்தியாலம் | 02 |
| 3. கணினிப் பரீட்சை | 100 | 02 மணித்தியாலம் | 03 |

16.1 **அலுவலக முறைமைகள்**.- அரசாங்க அலுவலகங்களில் பின்பற்றப்படும் அலுவலக முறைமைகள் குறித்த பரீட்சார்த்தியின் அறிவு, அறிவின் நடைமுறைப் பிரயோகம் குறித்த அவரின் திறமை, அலுவலகக் கடிதங்களை முறையாக விளங்கிக்கொள்வதற்கும் தெளிவான மற்றும் சுருக்கமான குறிப்புக்களினூடாக தனது கருத்துக்களை சமர்ப்பிப்பதற்குமான அலுவலரின் திறமை மற்றும் கட்டளைக்கு ஏற்ப கடிதம் ஒன்றை வரைவதற்கான திறமை ஆகியவற்றைச் சோதிப்பதாக இவ்வினாப்பத்திரம் அமையும். (கட்டமைக்கப்பட்ட, பகுதி அளவில் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டுரை வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

16.2 **கணக்கீட்டு முறைமை**.- அரசாங்க அலுவலகத்தில் பின்பற்றப்படும் கணக்கீட்டு முறைமைகள், கணக்குகளை ஒழுங்குபடுத்தும் ஏடுகள் மற்றும் பதிவுகள் குறித்த பரீட்சார்த்தியின் அறிவானது சோதிக்கப்படும். (கட்டமைக்கப்பட்ட மற்றும் பகுதி அளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

16.3 **கணினிப் பரீட்சை**.-

(i) அடிப்படைத் தகவல் தொழில்நுட்பக் கோட்பாடுகள்

(ii) விண்டோஸ் செயற்பாட்டு முறைமை (Windows Operating System)

(iii) கோவை முகாமைத்துவம்

(iv) சொல் செயலாக்கம் (Word Processing)

அடிப்படைத் திறன்கள், கணித்திரை பரீச்சயம், எழுத்துக்களை தொகுத்தல், எழுத்துக்கள், எழுத்துருக்கள் மற்றும் தன்மைகள் ஆகியவற்றை வரிசைப்படுத்தல், பந்திகளை ஓரப்படுத்தல், வரிசை இடைவெளி மாற்றம், தத்தல் அமைப்பு (Tab setting), சொல்லினைக் கண்டுபிடித்தலும் மீளமைத்தலும், எழுத்துக்கூட்டல் மற்றும் இலக்கணம், நிகண்டு, நிரல்களை ஒழுங்கமைத்தல், பக்க வடிவமைப்பு, ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகளை உருவாக்குதல், எழுத்து வடிவங்களை வகைப்படுத்தல், கோவை முகாமைத்துவம், அஞ்சல் ஒன்றிணைப்பு, மாக்ரோஸ் (macros) உடன் செயற்படுதல்

(v) விரிதாள்கள் (Spread sheets)

அடிப்படைத் திறன்கள், வடிவமைத்தல், செவ்வையாக்கம், நிரல்கள் மற்றும் வீச்சுக்கள், உட்சேர்த்தல் மற்றும் அழித்தல், தரவுகளை வகைப்படுத்தல் வரைபுகளை உருவாக்கல், அச்சிடல் @ தொழிற்பாடு (@function), மக்ரோக்களின் பயன்பாடு, கோவை முகாமை

(vi) தரவுத்தளம்

அறிமுகம் குறித்த அடிப்படைத் திறன்கள்

தரவுத்தளம் ஒன்றை உருவாக்குதலும் பயன்படுத்தலும்

படிவங்கள்

இணைக்கப்பட்ட படிவங்கள், மேல்வரல் (popup) படிவங்கள்

உரையாடல் மற்றும் தகவல் பெட்டிகள்

வினவுதல்கள் (Queries)

வகைப்படுத்தல்

அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்

மாக்ரோஸ் (macros) உடன் செயற்படுதல்

(vii) அளிக்கை/விளக்கப்படம்

அடிப்படைத் திறன்கள், வடிவமைத்தல், செவ்வையாக்கம்

வடிவங்கள், ஆயத்தப்படம் மற்றும் வரைபடங்களைப் பிரயோகித்தல் உருவ வடிவங்களை உட்சேர்த்தல், படவில்லை நிலைமாற்றம் (slide transition) மற்றும் புலக்காட்சி வெளிப்பாடுகள் (effects), அளிக்கைக் கருவிகளைப் பயன்படுத்தும் அசைவூட்டங்கள் (animations), மாஸ்ரர்களை (masters) தயாரித்தல், படவில்லை மற்றும் குறிப்புக்களை அச்சிடுதல்.

(viii) இணையம்

இணையத்திற்கான அறிமுகம், உலகளாவிய வலை (World Wide Web), கண்டுபிடிப்பது எவ்வாறு என்பது, நடைமுறை இணையம்

(ix) மின்னஞ்சல்

அறிமுகம், அடிப்படைத் திறன்கள், மின்னஞ்சல்களைப் பெற்றுக்கொள்ளுதல், மின்னஞ்சல்களை அனுப்புதல், பதிலனுப்புதல், இணைப்புக்களைப் பயன்படுத்துதல், செல்லப் பெயர்களை உருவாக்கலும் பயன்படுத்தலும், தகவல்களை உருவாக்குதல் (பல்தேர்வு, கட்டமைக்கப்பட்ட மற்றும் பகுதி அளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)

17.0 இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும். மேலும் இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினது தீர்மானமே இறுதியானதாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2019, ஏப்பிறல் மாதம் 9.

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2015 (II) 2019**

First Efficiency Bar Examination of Development Officers' Service - 2015 (II) 2019

**(இணைந்த சேவைகளுக்குரிய, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்க விருப்பம் தெரிவித்த அலுவலர்கள் மாத்திரம் பரீட்சை அறிவித்தலுக்கமைய விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்)**

உங்களுக்கு உரித்தான சேவை
(இதை நிரப்ப முன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4.0 இன் குறிப்பைப் பார்க்கவும்)

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 இற்கமைய பரீட்சையில் தோற்றுவதற்கு நீங்கள் உத்தேசிக்கும் நகரத்தைச் சுட்டிக்காட்டவும்)
(இதனைப் பின்னர் மாற்ற முடியாது)

| | நகரம் | நகர இல. |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் – 2
தமிழ் – 3
ஆங்கிலம் – 4
(உரிய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் :-----.
உதாரணம் GUNAWARDANE H.M.S.K)

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :-----.

2.0 சேவை நிலையம் மற்றும் முகவரி :

2.1 அலுவலகம் /திணைக்களம் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :-----.

2.2 அலுவலகம் /திணைக்களம் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :-----.

3.0 பால் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)

4.0 தேசிய ஆளடையாள அட்டை இல.

5.0 நீங்கள் தோற்றும் பாடம் /பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |
| | |
| | |

6.0 தொலைபேசி இலக்கம் : கையடக்கத் தொலைபேசி
நிலையான தொலைபேசி

7.0 தற்போதைய பதவி :

7.1 பதவி :-----.

7.2 நியமனக் கடிதத்தின் இல. : CS/DOS/ -----.

**குறிப்பு** : அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களுக்கான நியமன இலக்கம் CS/DOS/A/ என்ற குறியீட்டுடன் தொடங்குவதுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த மற்றும் இதுவரை உள்ளீர்க்கப்படாத அலுவலருக்கான நியமன இலக்கம் CS/DOS/Absorb/ எனத் தொடங்கும்.

7.3 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்ட திகதி/அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு எத்திகதி முதல் உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்துள்ளீர் :-----.

8.0 8.1 நீர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையாகவா? : :-----.

8.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையில்லையெனின் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :-----.

8.3 தபாலகம்/உப தபாலகம் அல்லது மாவட்ட/பிரதேச செயலகம் :-----.

8.4 பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

8.5 திகதி :-----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டுங்கள்<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனப்படலாம்) |

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

மேற்தரப்பட்ட தகவல்கள் சரியானதென்றும், மேலே குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத்தோற்றுவதற்கு எனக்குத் தகுதியுள்ளது என்றும், நான் பரீட்சைக்குத் தோற்றுவது ........... தடவையாகவென்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்துவது அவசியமில்லை என்றும்/ரூபா ............ பரீட்சைக் கட்டணத்தை .............. எனும் தபால்/உபதபால் அலுவலகம் அல்லது பிரதேச செயலகம்/மாவட்ட செயலகத்தில் ................ ஆந் திகதி செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கீழே ஒட்டியுள்ளேன் என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பரீட்சை நடாத்துதல் குறித்து பரீட்சை சட்டத்திலுள்ள சகல ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கும் நான் உடன்படுகின்றேன்.

------,
திகதி :-----. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

**குறிப்பு** : பரீட்சார்த்தியானவர் தனது உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிடுவதற்கு குறித்தொதுக்கப்பட்ட அலுவலர் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தல் :

எனது நிறுவனத்தின் அலுவலரான திரு./திருமதி/செல்வி............................................................ என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ................. ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும், அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து அவரை விடுவிக்க முடியுமென்றும்/பொருத்தமான பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும், அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

திணைக்களத் தலைவரின் சான்றுரை :

(i) மேற்தரப்பட்ட தகவல்கள் செவ்வைபார்க்கப்பட்டன என்றும்;
(ii) அலுவலர் இணைந்த சேவைகளுக்கு உரியவர் என்றும்/ அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்துள்ளார்* என்றும்,
(iii) அலுவலர் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்/தோற்றவில்லை* என்றும்,
(iv) அலுவலர் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளதால் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ளது எனவும்,
(v) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகுதியுள்ளது என்றும்;
நான் சான்றுப்படுத்துகின்றேன்.

* தேவையற்றதை வெட்டிவிடவும்.

------,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

4-921

## பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

## அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (II) 2019

1.0 2012.09.07 ஆந் திகதிய 1774/31 என்ற இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, 2012.02.14 ஆந் திகதிய 1745/11 என்ற இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இலுள்ள ஏற்பாடுகளுக்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2019, ஒகத்து மாதத்தில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2.0 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களின் பட்டியல் மற்றும் நகர இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகளின் பற்றாக்குறை அல்லது வேறு ஏதேனும் காரணமாக குறித்த நிலையத்தினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் விண்ணப்பதாரியின் இரண்டாவது விருப்பு நகரம் அல்லது கிட்டிய மற்றொரு நகரத்திற்கு அல்லது அமையப்பெற்றுள்ள பரீட்சை நிலையமொன்று தீர்மானிக்கப்படும். மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையுடைய அல்லது பரீட்சை நிலையமொன்றினை நிறுவுவதற்காக போதுமானளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருக்காதுவிடின் கொழும்பில் மாத்திரம் பரீட்சையினை நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் உரிமையினைக் கொண்டுள்ளார். கீழே தரப்பட்ட அட்டவணையில் நகர மற்றும் நகர இலக்கங்களை உசாவுதல் செய்து விண்ணப்பத்தின் உரிய பிரிவு நிரப்பப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்ட நகரம்/நகர இலக்கத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

அட்டவணை

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

3.0 (i) இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அது தொடர்பில், அவரினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

(ii) பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

4.0 **தகைமை** : முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்து, சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள 10 ஆண்டுகால முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெறுகின்றனர்.

(i) இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள்
(ii) இணைந்த சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படாத போதிலும் உள்ளீர்ப்பதற்கு விருப்பம் தெரிவித்திருக்கும் அலுவலர்கள்.

**குறிப்பு** : மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் குறித்தான ஏற்பாடுகளானவை இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக உரிய மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். அம்மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஏனைய நிறுவன அலுவலர்களின் விண்ணப்பங்களை இலகுவாக வேறுபடுத்த விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் பொருத்தமான சேவை அல்லது குறித்த நிறுவனத்துக்குரிய குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும். இணைந்த சேவைக்குரிய அலுவலரின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும். இவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் நீங்கள் உரித்தான சேவை எனும் இடத்தில் குறிப்பிடவும். (சரியான இலக்கத்தை குறிப்பிடாதுவிடுவதனால் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படமாட்டாது.)

5.0 இப்பரீட்சைக்கான விண்ணப்பமானது இவ் அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கு ஏற்ப அமைதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரியினாலேயே தயாரிக்கப்படுத்தல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை தனது திணைக்களத் தலைவரின் மூலம் 2019, மே மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புத் (தாபன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரியினை அடையக்கூடியதாக உரிய திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரானது குறிப்பிடப்படல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6.0 **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்.**- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில், பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவார்கள். அதற்காக பின்வரும் ஆளடையாளப்பத்திரம் ஏதேனும் ஒன்றினை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

மேலே குறிப்பிடப்பட்ட ஆளடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்களின் பரீட்சார்த்தத் தன்மையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம். இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளிற்கு இணங்கியொழுகுவதற்கு சகல விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டவராவர். மேலும், அவ் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எவற்றையாவது மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்திகள் உட்படுத்தப்படுவர்.

7.0 (i) விண்ணப்பங்கள் - பந்தி இலக்கங்கள் 1.0 தொடக்கம் 6.0 வரை முதற் பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் தோன்றும் விதத்தில் A4 அளவிலான ஒரு தாளில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பமானது தட்டச்சு செய்யப்பட முடியும். ஆனால், அதை விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது பின்னிணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தினையே ஒத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்பவேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி அனுப்பலாகாது. மாதிரிப்படிவத்துக்கு அமையாத மற்றும் முறையாக முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப் படிவங்கள் இரண்டிலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் பரீட்சை தலைப்பினை அதேபோல ஆங்கில மொழியிலும் தயவு செய்து குறிப்பிடவும். தன்னால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாகவும் சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் விண்ணப்பம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனவும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். மேலும், விண்ணப்பதாரி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.

(ii) தவறான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.- விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப, எவரேனும் ஒரு பரீட்சார்த்தி

தகைமையற்றவர் என தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி தன்மையினை இரத்துச்செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தவேண்டியதில்லை. எனினும், அடுத்தடுத்த அமர்வுகளிற்கு ஒரே தடவையில் எல்லா விடயங்களுக்கும் தோற்றுவதானால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்கு தோற்றுவதானால் ரூபா 500 உம் ஒரு விடயத்துக்கு மட்டும் தோற்றுவதானால் ரூபா 250 உம் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 க்கு அரசாங்க வருமானத்துக்கு வரவு வைக்கப்படுவதற்கென தீவின் ஏதேனுமோர் தபாலகம்/உபதபாலகத்தில் அல்லது மாவட்ட/பிரதேச செயலகத்துக்கோ பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனப்படலாம். இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். எக்காரணங் கொண்டும் இக்கட்டணம் திருப்தியளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்கு செலுத்திய கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றிக்கொள்ள முடியாது. மேலும் பரீட்சைக் கட்டணத்துக்காக முத்திரை அல்லது காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் அனுமானத்திற்கு ஏற்ப, அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசியின் பிரதிகளையும் அனுமதி அட்டைகளையும் வழங்குவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அல்லது திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 நாட்கள் அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையிடும் வேளையில் பின்வருவனவற்றை அதாவது தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியிருப்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பிய போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதிகள் என்பனவற்றை தங்களிடம் வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின், மேலே குறிப்பிட்ட விபரங்களுடன் அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளில் தமது கையொப்பங்களை முன்கூட்டியே உறுதிப்படுத்தப்பட்டு பெற்றுக்கொள்வதுடன் அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளித்தலும் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளார் எனக் கருதலாகாது.

9.0 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

10.0 பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தன்னுடைய கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

11.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள, அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவான வகையில் கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர்கள் அனுமதித்தல் வேண்டும். பிரயாணச் செலவினங்கள் எவையும் செலுத்தப்படலாகாது.

12.0 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் நடத்தப்படும் உரிய சேவைக்கு நுழைவுப் பரீட்சைக்காக அவர்கள் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும். ஒரு போட்டிப் பரீட்சை இல்லாமல் சேவைக்குள் உள்நுழைந்த பரீட்சார்த்திகள் தொடர்பில், அவர்களின் கல்வி மொழி மூலத்தில் அல்லது அரசகரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

13.0 அலுவலர்கள் தமது தற்றுணிபின் பேரில் வெவ்வேறாக மற்றும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட தடவைகளில் தனித்தனியாகத் தோற்றலாம். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நாற்பது வீதத்தினை (40%) அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி 10 இனைப் பார்க்கவும்.)

14.0 அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்திற்காக, சகல அலுவலர்களும் அரசகரும மொழியில் விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து அம்மொழி மூலம் நிரப்புதல் வேண்டும்.

15.0 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளின் பெறுபேறு அடங்கிய பெயர்ப் பட்டியல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியலானது பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

16.0 **பரீட்சை நடைமுறை.-** விண்ணப்பதாரிகள் பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும்.

| பாடம் | புள்ளிகள் | நேரம் | பாட இல. |
|---|---|---|---|
| 1. தாபனச் சட்டக்கோவை மற்றும் செயலொழுங்கு விதிகள் | 100 | 02 மணித்தியாலங்கள் | 01 |
| 2. நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் கொள்வனவு நடைமுறைகள் | 100 | 02 மணித்தியாலங்கள் | 02 |

(மேற்கூறப்பட்ட வினாத்தாள்களில் பகுதி I கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். பகுதி II கட்டுரை வினாக்கள் 8 ஐக் கொண்டிருக்கும். 4 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும்.)

16.1 தாபனச் சட்டக் கோவை மற்றும் செயலொழுங்கு விதிகள்.- தாபனச் சட்டக்கோவையின் VI, VII, VIII, XII, XIII, XIV, XVII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII ஆம் அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள்.

16.2 நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் கொள்வனவு நடைமுறைகள் I, II, III, IV, V ஆம் அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க கொள்வனவு நடைமுறைகள்.

17.0 இப்பரீட்சை அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும். மேலும் இவ் அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினது தீர்மானமே இறுதியானதாகும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2019, ஏப்பிறல் 9.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017 (II) 2019**

Second Efficiency Bar Examination of Development Officers' Service - 2017 (II) 2019

| | நகரம் | நகர இல. |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 இற்கமைய பரீட்சையில் தோற்றுவதற்கு நீங்கள் உத்தேசிக்கும் நகரத்தைச் சுட்டிக்காட்டவும்)
(இதனைப் பின்னர் மாற்ற முடியாது)

உங்களுக்கு உரித்தான சேவை
(இதை நிரப்ப முன் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4.0 இன் குறிப்பைப் பார்க்கவும்) ☐

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்)

---

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
1.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் :-----.
(உதாரணம் GUNAWARDANE H.M.S.K)
1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :-----.

2.0 வேலை செய்யும் இடம் மற்றும் முகவரி :
2.1 அலுவலகம் /திணைக்களம் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :-----.
2.2 அலுவலகம் /திணைக்களம் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :-----.

3.0 பால் :
பெண் - 1 ☐
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)

4.0 ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 நீங்கள் தோற்றும் பாடம் /பாடங்கள் :

| பாடம் | பாட இல. |
|---|---|
| | |
| | |

6.0 தொலைபேசி இலக்கம் : கையடக்கத் தொலைபேசி ☐☐☐☐☐☐☐☐☐☐
நிலையான தொலைபேசி ☐☐☐☐☐☐☐☐☐☐

7.0 தற்போதைய பதவி :

7.1 பதவி :-----.

7.2 நியமனக் கடிதத்தின் இல. : CS/DOS/ -----.

**குறிப்பு** : அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்க்கான நியமன இலக்கம் CS/DOS/A என்ற குறியீட்டுடன் தொடங்குவதுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்த மற்றும் இதுவரை உள்ளீர்க்கப்படாத அலுவலர்க்கான நியமன இலக்கம் CS/DOS/Absorb/ எனத் தொடங்கும்.

7.3 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II/ III இற்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.

7.4 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு எத்திகதி முதல் உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்துள்ளீர் :-----.

8.0 8.1 இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையாகவா? :-----.

8.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவையில்லையெனின் செலுத்திய பரீட்சைக் கட்டணம் :-----.

8.3 தபாலகம்/உபதபாலகம் அல்லது மாவட்ட/பிரதேச செயலகம் :-----.

8.4 பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

8.5 திகதி :-----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கலராதவாறு இங்கு ஒட்டுங்கள்<br>(பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனப்படலாம்) |

9.0 **விண்ணப்பதாரியின் சான்றுரை**

மேற்தரப்பட்ட தகவல்கள் சரியானதென்றும், மேலே குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத்தோற்றுவதற்கு எனக்குத் தகுதியுள்ளது என்றும், நான் பரீட்சைக்குத் தோற்றுவது ........... தடவையாகவென்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்துவது அவசியமில்லை என்றும்/ரூபா ............ பரீட்சைக் கட்டணத்தை .............. எனும் தபால்/உபதபால் அலுவலகம் அல்லது பிரதேசம் செயலகம்/ மாவட்ட செயலகத்தில் ............... ஆந் திகதி செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கீழே ஒட்டியுள்ளேன் என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் பரீட்சை நடாத்துதல் குறித்து பரீட்சை சட்டத்திலுள்ள சகல ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கும் நான் உடன்படுகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு** : பரீட்சார்த்தியானவர் தனது உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிடுவதற்கு குறித்தொதுக்கப்பட்ட ஓர் அலுவலர் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தல் :**

எனது பணி நிலையத்தின் ஓர் அலுவலரான திரு./திருமதி/செல்வி......................................................... என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ................. ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும், நான் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

***திணைக்களத் தலைவரின் சான்றுரை :***

(i) மேற்தரப்பட்ட தகவல்கள் செவ்வைபார்க்கப்பட்டன என்றும்;
(ii) அலுவலர் இணைந்த சேவைகளுக்கு உரியவர் என்றும்/ அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட விருப்பம் தெரிவித்துள்ளார்./அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளார் என்றும்*,
(iii) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்கு தகுதியுள்ளது என்றும்; நான் சான்றுப்படுத்துகின்றேன்.

* தேவையற்றதை வெட்டிவிடவும்.

------,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

திகதி :-----.
பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.

*4-922*

---

## *கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற - பிரிவு II பதவி (கம்பனி பரிசோதகர்) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019*

## Open Competitive Examination for Recruitment of Management Assistant non - Technical Section II Post (Company Inspector) in the Department of the Registrar of Companies - 2019

*கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற - பிரிவு II பதவிக்கான (கம்பனி பரிசோதகர்) 08 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இல. 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (2019 ஓகத்து)*

1. ***ஆட்சேர்ப்பு முறை.*** *- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதுடன் பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின் அடிப்படையில் மற்றும் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.*

2. ***தகைமைகள்.-***

*2.1 கல்வி தகைமைகள்*
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

*2.2 உடற் தகைமைகள்*
ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நாட்டின் எந்த ஒரு பிரதேசத்திலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*2.3 ஏனையவை*
(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பத்தாரர்கள் சிறந்த ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பிற்குரிய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. ***நியமனத்தின் ஒப்பந்தங்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்கள்***
(i) இப்பதவி நிரந்தரமானது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுபடுதல் வேண்டும்.
(ii) இப்பதவி மூன்று வருட தகுதி காண் கால எல்லைக்குட்பட்டது. கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் இணை உத்தியோகத்தர் சேவைப் பிரிவிற்காக (கம்பனி பரிசோதகர் பதவி) நியமிக்கப்பட்டு மூன்று வருடத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கிணங்க மற்றும் அதனோடு இணைந்த சுற்றறிக்கைக்கு இணங்க சேவைக்கு இணைந்து 05 வருட காலத்தினுள் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருப்பதுடன், அரச மொழி அல்லாத மொழி மூலமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் தகுதிகாண் கால எல்லைக்குள் அரச மொழி பற்றிய திறமைத்துவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பொது சட்ட விதிமுறைகள், இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதிப்பிரமாணம் மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கு அமைய இந்நியமனம் மேற்கொள்ளப்படும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க 1998.05.24 ஆந் திகதி அல்லது அதற்கு முந்திய அல்லது 1984.05.24 ஆந் திகதி அல்லது அதற்கு பிந்திய பிறந்த தினத்தை கொண்டிருத்தல் வேண்டும்.)

5. **சம்பள அளவீடு**.- இப்பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பளம், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் எம். என். 4- 2016 இன்படி ரூபா 31,490 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 5 × 750 - ரூபா 54,250 ஆகும்.

6. **எழுத்துமூலப் பரீட்சை.**-

(i) கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கான இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2019, ஒகத்து மாதம் கொழும்பில் நடைபெறும்.

(ii) பரீட்சைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும்.

(iii) விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒரு மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றலாம். இருப்பினும் அவர் தான் தேர்ந்தெடுத்த ஏதேனும் ஒரு மொழி மூலமே அனைத்துப் பரீட்சைகளுக்கும் சமுகமளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை மாற்றுவதற்கு பிறகு இடமளிக்கப்படாது.

| விடய இலக்கம் | விடயம் | குறிப்பிட்ட நேரம் | புள்ளிகள் | தேர்ச்சி புள்ளியளவு |
|---|---|---|---|---|
| 01. | மொழி அறிவு | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 02. | நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

(iv) எழுத்துப் பரீட்சையானது பின்வரும் விடயங்கள் சம்பந்தமான கேள்விப் பத்திரத்தைக் கொண்டிருக்கும்.

**எழுத்துப் பரீட்சையின் விடயங்களின் குறிப்புகள் :**

01. *மொழியறிவு* .- இப்பரீட்சைப் பத்திரமானது விண்ணப்பதாரியின் எண்ணத்தை வெளிப்படுத்தல், புரிதல், எழுத்துக் கட்டமைப்பு, மொழி மற்றும் கட்டுரை, வழங்கப்படும் கடிதத்தை சுருக்குதல், வழங்கப்படும் தகவல்களுக்கு அமைய அட்டவணை தயாரித்தல், வழங்கப்படும் உரையை சாரம்சம் செய்தல், வழங்கப்பட்டுள்ள வாக்கியங்கள் சிலவற்றின் எண்ணத்தை தனி வாக்கியமாக எழுதுதல் மற்றும் எளிய இலக்கண பாவனை பற்றிய அறிவுத் தொடர்பில் விடய சம்பந்தமான கேள்விகளில் தேர்ச்சி பெறல்.

02. *நுண்ணறிவு*.- இப்பரீட்சைப் பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரியின் கணித அறிவு, தர்க்கிக்கும் அறிவு மற்றும் பொது அறிவு கணிக்கப்படும் விதத்தில் தயரிக்கப்படும் விடய சம்பந்தமான கேள்விகளில் தேர்ச்சி பெறல்.

7. **நேர்முகத்தேர்வு.**-

(i) எழுத்துப்பரீட்சையில் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்றி, அனைத்து வினாப் பத்திரங்களிலும் 40% இற்கும் குறையாத புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பத்தாரிகளுக்கிடையில் முன்னுரிமை அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள, காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) கம்பனிகள் பதிவாளர் திணைக்கள நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை குழுவினால் விண்ணப்பதாரிகளின் அடிப்படை தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும். நேர்முகப்பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படாததுடன் எழுத்துப்பரீட்சை மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படும்.

8. **விண்ணப்பிக்கும் முறை.-**

(i) விண்ணப்பப்படிவம் மாதிரி படிவத்தின் படி A4 கடதாசியில் தயாரித்து அனுப்பப்படல் வேண்டும். A4 தாளின் இரண்டு பக்கத்தையும் பாவிப்பதுடன், இலக்கம் 01 தொடக்கம் 05 வரை முதலாவது பக்கத்திலும் மிகுதி இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது விண்ணப்பதாரியின் கையெழுத்திலேயே தெளிவாக நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தயாரிக்கும் பொழுது தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக பூரணப்படுத்தப்படாத சகல விண்ணப்பங்களும் மற்றும் பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தங்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பட பிரதியினை தம்வசம் வைத்திருப்பது உகந்தது.

(ii) விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற எண்ணும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(iii) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு பிரிவு (நிறுவன மற்றும் வெளிநாட்டு), இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு 24.05.2019 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். அத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் கம்பனி பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். யாதேனுமொரு நிறுவனத்தில் பணிபுரியும் ஒருவர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது தனது நிறுவன தலைவரினால் அல்லது அவரினால் பொறுப்பளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் அவ்வாறில்லாத விண்ணப்பதாரி தனது கையொப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபர், தொகுதியின் கிராம அலுவலரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையின் அத்தியட்சகர், அரச அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர அதிகாரம் பெற்ற அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) சகல விதத்திலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலின் போது விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பில் செய்யப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குள் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல், தேவையிருப்பின் மட்டும் திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டதும் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

(vii) அனுமதி அட்டையினை விநியோகித்தவுடன் அது பற்றிய அறிவித்தலொன்று செய்தித்தாள்களில் அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை எனின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் முகவரியினை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், குறித்த விபரங்களுடன் அனுமதி அட்டையின் பிரதியொன்றை விரைவில் பெறுவதற்கு ஏற்ற வகையில் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிடுவதன்மூலம் கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கையில் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தங்கள் வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை தயார் செய்து வைத்திருத்தல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்.-**

(i) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அனுப்பிய தகைமைகளை கொண்டுள்ள சகலருக்கும் இலங்கை பரீட்சைகள் திணைக்கள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தில் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பத்தினை

உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்வாறின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சைகள் நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வழங்குதல் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்கள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டத்திட்டங்களை மீறும் சந்தர்ப்பத்தில் இலங்கை பரீட்சைகள் திணைக்கள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உள்வாங்கப்படுவர்.

(ii) பரீட்சார்த்தி தனக்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே, பரீட்சைக்குத் தோற்றும் முன்னரே தனது அனுமதி அட்டையினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் கையளித்தல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய சட்ட ஒழுங்குகள் இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

**குறிப்பு** : விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது, அவர் பதவிக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. **பரீட்சைக்கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆவதுடன் விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டினுள் காணப்படும் ஏதாவதொரு தபால்/உப தபால் அலுவலகங்களிலும் அல்லது மாவட்ட/ பிரதேச செயலக அலுவலகங்களிலும் செலுத்தி, விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் ஓரத்தை விண்ணப்பப்பத்திரத்தில் உரிய இடத்தில் கழறாத வகையில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படாது. அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரி வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

**குறிப்பு**.- எந்த காரணத்திற்காகவும் பரீட்சையிலிருந்து விலகுதல் அல்லது தோற்றாதிருத்தல் அல்லது பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் தகைமையில்லாதிருத்தல் தொடர்பில், எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்கட்டணம் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மீளப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையில்லை.

11. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.-
விண்ணப்பதாரி தான் பங்குகொள்ளும் ஒவ்வொரு பரீட்சைக்காகவும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரி திருப்தி கொள்ளக்கூடிய வகையில் அவரின் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக கீழ்வரும் சான்றிதழ்களில் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
(i) தேசிய ஆள் அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

12. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.-
தங்களால் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு தகவல் உண்மையற்றது அல்லது பிழையானது என நிரூபிக்கப்படுமாயின் உள்வாங்கப்படுவதற்கு முன்னர் அனுமதி நிராகரிக்கப்படும். அவ்வாறே உண்மையற்ற அல்லது பிழையான தகவல் உள்வாங்கப்பட்டதற்கு பின்னர் நிரூபிக்கப்படுமாயின் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவானதாகும். அதே போல் வெற்றிடம் பூரணப்படுத்தப்படல் அல்லது பூரப்படுத்தப்படாமை அல்லது வெற்றிடங்களில் பகுதியளவு பூரணப்படுத்தப்படல் போன்ற இறுதித் தீர்மானம் கம்பனி பதிவாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் கட்டளைப்படி,

கம்பனிகள் பதிவாளர் நாயகம்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2019, ஏப்பிறல் .

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற - பிரிவு II பதவி (கம்பனி பரிசோதகர்) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

Open Competitive Examination for Recruitment of Management Assistant non-Technical Section 2 Post (Company Inspector) in the Department of the Registrar of Companies - 2019

பரீட்சைக்குத் தோற்றும் மொழி
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
பொருத்தமான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
1.2 முதலெழுத்தினை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் :-----.
(உதாரணம் GUNAWARDANE H.M.S.K)
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :-----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2.3 செல்லிடத் தொலைபேசி இலக்கம் :-----.
2.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

03. 3.1 பால் (கூட்டினுள் உரிய இலக்கத்தினை எழுதவும்) :
பெண் - 1
ஆண் - 0
3.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் :-----.

04. 4.1 பிறந்த திகதி : வருடம் :-----. மாதம் :-----. திகதி :-----.
4.2 2019.05.24 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

05. 5.1 இலங்கை பிரசாவுரிமையுள்ளவரா எனும் விபரம் :-----.
(பரம்பரையினாலா அல்லது பதிவினாலா என்பது)
5.2 இனம் :-----.

06. 6.1 கல்வித் தகைமைகள் :-
க. பொ. த. (சா.த.) சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ.த.) சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

பட்டதாரியாயின், பின்வரும் விபரங்களை வழங்கவும் :

(i) பட்டத்தின் பெயர் மற்றும் செல்லுபடியாகும் திகதி :-----.

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :-----.

(iii) சித்தியடைந்த வகுப்பு :-----.

6.2 வேறு தகைமைகள் (கணினி அறிவு/தமிழ் - ஆங்கில மொழியறிவு போன்றவை) :-----.

6.3 2019.05.24 ஆந் திகதியில் தொழில் அனுபவம் : வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

07. விண்ணப்பதாரி இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் தொழில் புரிந்து விலகியவரா? அல்லது விலக்கப்பட்டவரா? என்பது பற்றி :-----.

08. 8.1 ஏதேனும் தவறொன்றிக்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீரா? :-----.

8.2 ஆம் எனில், விபரங்களைத் தருக :-----.

09. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் விபரம் :

9.1 பணம் செலுத்திய தபால் அலுவலகம் :-----.

9.2 பற்றுச்சீட்டு இலக்கம் :-----.

9.3 பணத்தொகை :-----.

| பற்றுச்சீட்டை கழறாதவாறு அதன் ஓரத்தை இங்கு ஒட்டவும் |
|---|

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை

இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய இலக்கம் ............. திகதி ................. கொண்ட பற்றுச்சீட்டினை இத்துடன் இணைத்துள்ளேன் எனவும் உறுதியளிக்கிறேன். மேலும் நேர்முகப் பரீட்சையின் சட்டதிட்டங்களின்படி நான் தகைமையற்றவர் என நேர்முகப் பரீட்சைக்கு முன்னர், நேர்முகப் பரீட்சையின் போது அல்லது அதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு மேற்கொள்ளும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதி கூறுகிறேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் (8) iv இன்படி) :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி............................................................ (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதுடன், குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தி, அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டு ................. ஆந் திகதி என் முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என உறுப்படுத்துகிறேன்.

------,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

12. திணைக்களத் தலைவரின் சிபாரிசு (அரசாங்க/ மாகாண அரசாங்க/ அரச திணைக்களத்தில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்) :

இவ் விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................ என்பவர் இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................ பதவியில் சேவை புரிகிறார் எனவும், அவருடைய விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்கிறேன். இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க அவசியமான காரியங்களை செய்ய முடியும்.

------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.
பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்துக.)

4-1112

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.